தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆவணி 29, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022

1991 செப்டம்பர் 14, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.''

சேர்க்கும் திறன் அறிந்து, தீமை ஒன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்டு வரும் பொருள் அறத்தையும் கொடுக்கும்; இன்பத்தையும் கொடுக்கும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 26. திரு டி,எம், ரங்கராஜன்—மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

26—

தண்ணீர் வரி.

*101—திரு. டி.எம். ரங்கராஜன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காவிரியில் தண்ணீர் சரியாக வராத நிலையில் திருச்சி, தஞ்சை விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகின்ற தண்ணீர் வரி ரத்து செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. டி.எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் தமிழக முதல்வராக ஆனவுடன் காவிரித்

தாய், கர்நாடக அரசு தடுத்தும் இன்றைக்கு தமிழகத்திலே துள்ளிக் குதித்து வருகின்றாள். ஆனால் கடந்த 15 ஆண்டுக் காலமாக காவிரியில் சரியாக நீர் வராத நிலையிலே திருச்சி, தஞ்சை விவசாயிகள் பெருத்த நஷ்டத்திற்கும் கடன் தொல்லைக்கும் ஆளாகி உள்ளனர். தஞ்சை மாவட்டத்துக்காரரான நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு ஆவன செய்ய இந்த அரசு முன் வருமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை இடர்ப்பாடு, செயற்கை இடர்ப்பாடு என்று இருக்கின்றது. இயற்கை இடர்ப்பாடு தான் காவிரியில் நீர் வராமல் இருப்பது; செயற்கை இடர்ப்பாடு, வெள்ளம், புயல், வறட்சி, பெரும்பாலும் அண்மைக்காலங்களில் வெள்ளம் வறட்சி இல்லாத காரணத்தினால் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் தண்ணீர்த் தீர்வை கடந்த இரண்டு பசலிக்கும் வசூல் செய்யப்பட்டு இருக்கிறது. 1399, 1400 பசலிக்கு பூராவும் வசூல் செய்யப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. பாப்பாசுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரி வசூல் செய்யப்படுவது ஏக்கர் அளவிலே வசூல் செய்யப்படுகிறதா அல்லது விவசாயிகள் விளைவிக்கின்ற பயிரை வைத்து வசூலிக்கப்படுகிறதா? இரு போகம், முப்போகம் என்று சொல்வார்களே அந்த அடிப்படையிலே வசூலிக்கப்படுகிறதா அல்லது நிலத்தின் தரத்தை வைத்து வசூலிக்கப்படுகிறதா என்பதை தங்கள் மூலம் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கடைசியில் சொன்னாரே, ‘தரம்’ என்று, அந்த தரத்தின் அடிப்படையில் வசூல் செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, காவிரியில் தண்ணீர் சரியாகக் கிடைக்காத காரணத்தினால் விளை நிலங்கள் எல்லாம் மிகப் பெரிய நஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கின்ற காரணத்தினாலே தான் இந்த தண்ணீர் வரியை ரத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். தண்ணீர் வரியை ரத்துச் செய்வதற்கான செயற்குறிப்பு உள்ளதா என்பதை ஆராய்ந்து, அதே நேரத்தில்

1991 செப்டம்பர் 14]

அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்தத் தண்ணீர் வரியை ரத்துச் செய்வதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நான் பசலியினுடைய எண்ணை சொன்னேன். ஆனால் அது உங்களுக்கு வருஷத்தில் சொல்ல வேண்டும் என்றால் 1989–90, 1990–91 ஆகிய இரண்டு ஆண்டு களுக்கு தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் தண்ணீர் தீர்வை வசூல் செய்யப்பட்டு இருக்கிறது. வசூல் செய்து முடிந்து ஆகிவிட்டது. பாக்கி கூட இல்லை. தள்ள வேண்டிய நிலைமை ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 27. திரு. இரா. நடேசன். மாண்புமிகு கல்வி அமைச்சர்

27—

ஆசிரியர் பயிற்சி மற்றும் கல்வியியல் கல்லூரி.

*5—திரு. இரா. நடேசன் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சி மற்றும் கல்வியியல் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சி மற்றும் கல்வியியல் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கேள் விக்கு இடம் இல்லை என்று சொன்னார்கள். அங்கே இந்நாள் வரையிலும் அரசு கல்லூரி இல்லை. அங்கு 13 தனியார் கல்லூரிகளும், ஒரு தேவசம் கல்லூரியும் இருக் கின்றன. அங்கு கற்கின்ற மக்களுக்கு எல்லாம் பி.எட். படிப்பதற்கு ஒரு தனியார் கல்லூரி மட்டும் தான் இருக்